NEWS RELEASE

# SRI RAMACHANDRA MEDICAL CENTRE

Porur, Chennai-600 116. Telefax : 044-23860217. www.sriramachandra.edu.in

# SRMC DOES INNOVATIVE PROCEDURE FOR A RARE LIVER ABNORMALITY IN KID

Chennai,
7th March 2019

Sri Ramachandra Medical center has done an innovative interventional radiology procedure for a rare life threatening congenital vascular malformation in liver in a five-year old boy. Instead of normal blood flow from intestine to liver that carries digested byproducts for absorption and filtering of toxins in the liver before drainage into heart for circulation in the body, in this kid, by birth, there was an abnormal connection inside the liver, because of which, the blood with toxins from intestine was directly draining into the heart without being processed. Using interventional radiology approach, a stent was placed in the major blood vessel which drains blood from abdomen into heart, by which the abnormal flow of blood inside the liver into this big vein was blocked. With this the normal function of the liver was restored.

A five year old boy came with complaints of progressive breathlessness on exertion with effort intolerance for two years, with no history suggestive of underlying cardio-pulmonary illness. On examination, he had bluish discoloration of tongue and digits suggestive of cyanosis. On evaluation, he had congenital intra-hepatic portosystemic shunt (Abernethy malformation intrahepatic Type V) with hepato pulmonary syndrome.

These congenital vascular malformations which form as shunts between portal vein and inferior vena cava were discovered by John Abernethy in 1793. Since then, only around 100 cases have been reported worldwide, further emphasizing the rarity of this condition. Only patients symptomatic due to this abnormal shunting of blood are treated. Many have small shunts with no obvious symptoms and hence only on periodic follow up with no specific intervention.

Due to abnormal shunting of portal venous blood into systemic circulation, there is passage of vasoactive mediators from the splanchnic circulation directly into the pulmonary system bypassing the liver. This leads to intrapulmonary vascular dilatations and impaired oxygen exchange resulting in hepato pulmonary syndrome (HPS). This five-year old child was suffering from the same, which was progressively increasing for two years.

Due to rarity of this condition, no standard protocol of treatment is available. Interventional radiology procedures include coil embolization for small shunts and use of vascular plugs for large high flow ones. Surgical options are ligation for shunts outside the liver, liver resection for large multifocal intrahepatic shunts or failed embolization and finally liver transplantation if none of the other options are feasible or failed.

**Perhaps for the first time anywhere (not recorded in medical journals),** using interventional radiology approach, a covered stent was placed in the inferior vena cava (IVC), inferior to opening of hepatic veins and superior to opening of left renal vein, effectively closing the opening of the intrahepatic portosystemic shunt into IVC, followed by significant improvement in oxygenation. The child did well and was discharged without any problems in five days.

The child came for follow up after three months. Doing very well. Bluish discoloration of tongue and fingers disappeared, weight gain was noted and started going back to school.

…………………

For more information pl, contact…. Dr. Chandan Kumar, Asst. Professor, 8754919777. Dr. Santhosh Joseph, HOD, Interventional Neuro Radiology, 9840242219, Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, nallamuthu@hotmail.com; mediarelations@sriramachandra.edu.in

SRI RAMACHANDRA MEDICAL CENTRE

செய்திக்குறிப்பு Porur, Chennai-600 116. Telefax : 044-23860217 www.sriramachandra.edu.in

# குழந்தையின் பிறப்புசார் உயிர்கொல்லி கல்லீரல் பிரச்சினைக்கு ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் அதிநவீன சிகிச்சை

சென்னை,
7 மார்ச் 2019

பிறப்பிலேயே குழந்தையின் கல்லீரலில் ஏற்பட்டிருந்த உயிருக்கு ஆபத்தான ஒரு இரத்தக்குழாய் மாற்றத்தை ஊடுருவும் கதிரியக்க நுண்துளை முறை மூலம் அதிநவீன சிகிச்சை அளித்து ஐந்து வயது சிறுவனை ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையம் காப்பாற்றியுள்ளது. இயல்பாக ஒருவருக்கு சிறுகுடலில் செரிமானம் ஆகும் உணவு இரத்தக்குழாய் மூலம் கல்லீரலுக்கு சென்று அங்கு நச்சுப் பொருட்கள் நீக்கப்பட்டு தேவையான சத்துக்களை உடல் ஈர்த்துக்கொள்ளும் வண்ணம் சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் இதயத்திற்கு செல்கிறது. ஆனால். இந்த குழந்தைக்கு பிறவியிலேயே கல்லீரலுக்குள் ஏற்பட்டிருந்த ஒரு இரத்தக்குழாய் தொடர்பால் உடம்பிற்கு தேவையில்லாத நச்சுப் பொருட்கள் நீக்கப்படாமலேயே இதயத்திற்கு செல்வது கண்டுபிடிக்கப்பட்டது. நுண்துளை ஊடுருவல் கதிரியக்க முறையில் கல்லீரலுக்குள் இருந்த இந்த தேவையற்ற இரத்த நாள குழாய் அடைக்கப்பட்டது. இதனால், கல்லீரல் இயல்பான செயல்பாட்டை அடைந்தது.

இந்த சிறுவன் முதன்முதலில் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்திற்கு வந்த போது, ஏற்கனவே கடந்த இரண்டு வருடங்களாக இயல்பான செயல்பாட்டின் போது மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டது. நாக்கு மற்றும் சில தோல் பகுதிகளில் நீல நிற சாயல் காணப்பட்டது. பரிசோதித்த மருத்துவர்கள் அவனுக்கு இதய மற்றும் நுரையீரல் சார்ந்த பிரச்சினை ஏதும் இல்லை என்பதை உணர்ந்தனர். மேலும் பரிசோதித்து அவனுக்கு கல்லீரலுக்குள் பிறவியிலிருந்தே ஒரு தவறான இரத்தக்குழாய் பாதை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிலைமையை முதன்முதலாக ஜான் அபர்நிதி என்பவர் 1793ல் கண்டுபிடித்தார். அதன்பிறகு, உலகளவில் இது போன்று சுமார் 100 நிகழ்வுகளே தெரிய வந்துள்ளன. இப்படிப்பட்ட நோயாளிகளுக்கு அறிகுறிகளின் தன்மையிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதில் பலருக்கு, இந்த தவறான இணைப்பு, மிகச்சிறிய அளவில் இருந்ததால் மேற்கூறப்பட்டது போல, கதிரியக்க ஊடுருவல் சிகிச்சை மேற்கொள்ளப்படாமலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது.

இவ்வகையான பிறவிசார் நிகழ்வு மிகவும் அரிதான காரணத்தால் இதற்கு வரையறுக்கப்பட்ட சிகிச்சைகள் இல்லை. இந்த நிலைமை, கல்லீரலுக்கு மேற்பகுதியில் இருந்தால் அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யமுடியும். ஊடுருவல் கதிரியக்க சிகிச்சைகள் மூலம் கல்லீரலுக்குள் இப்படிப்பட்ட குழாயை அடைக்க ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையம் எடுத்துக்கொண்ட நவீன முறை வெற்றி பெற்றுள்ளது. இப்படிப்பட்ட சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் கல்லீரல் உறுப்பு மாற்று சிகிச்சையே அடுத்த வாய்ப்பாக உள்ளது.

இந்த முறையிலான சிகிச்சை இதுவரை இந்தியாவில் செய்யப்படவில்லை. (இதுவரை உலகத்தர மருத்துவ வெளியீடுகளில் காணப்படவில்லை). சிகிச்சை பெற்று குணமடைந்தபின் ஐந்து நாட்களுக்கு பிறகு சிறுவன் வீடு திரும்பினான். அடுத்த மூன்று மாதத்திற்கு பின் மேற்கொண்ட பரிசோதனைகளில் நாக்கு மற்றும் சில தோல் பகுதிகளில் நீல நிற சாயல் நீங்கிவிட்டது. உடல்எடை தேறிய சிறுவன் பள்ளி செல்கிறான்.

-----------------------------------

மேலும் விபரங்களுக்கு........Dr. Chandan Kumar, Asst. Professor, 8754919777. Dr. Santhosh Joseph, HOD, Interventional Neuro Radiology, 9840242219, Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, nallamuthu@hotmail.com; mediarelations@sriramachandra.edu.in